(திருக்கோவையார்)

'திருச்சிற்றம்பலக் கோவையாருண்மை' என்ற நூலுக்கு மறுப்பு நூல்.

By A. VETRIVER PILLAI.

1896.

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P.O.
RAMNAD DIST.

உ

சிவமயம்.

சிவத்துரோக கண்டனம்.

சைவசமயிகளே, வித்துவான்களே,

“திருச்சிற்றம்பலக்கோவையாருண்மை” என்னும் பரமசிவத்துரோக நூல் ஒன்று இந்நாள் வெளிவந்திருக்கின்றது. அது உங்களுங்கள் பார்வைக்கு வந்திருக்கலாமே.

இதைச் செய்தார் இன்னர் என்பது தெரியவில்லை. நம்மவராகிய, சி - தம்பையாபிள்ளை இதை அச்சிடுவித்து வெளியிட்டிருக்கின்றார் அம்மட்டோ? அவரை “அறிஞர்பெருமானர்” “ஞானசாரியர்” என்று கொண்டாடியும் எழுதியிருக்கின்றார்.

இந்த நூல் முழுதிலும் நாயகி - பரம்பொருள். நாயகன் - பக்குவான்மா. தோழி-திருவருள். தோழன்-ஆன்மபோதம். செவிலித்தாய்-திரோதாயி. நற்றாய் பசை என்றுகொள்ளப்பட்டிருக்கின்றது. அந்தோ! இது யார் செய்த பாவமோ!! தெரிகின்றிலம்!!

பரம்பொருள்=சிவபெருமான்

பக்குவான்மா=சீவன்

நாயகி=பெண்டாட்டி

நாயகன்=புருஷன்

சைவசமயிகளே, நன்றகக்கவனியுங்கள்.

சிவபெருமானே ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சர்வலோகைக்நாயகர். அவரோ! அந்தச் சிவபெருமானே ஒருவருக்குப் பெண்டாட்டியாய் வாழ்க்கைப் படும் விஷயத்தில் அச்சிவபெருமானுக்கு எவ்விதத்தாலும் உயர்ந்தவர் ஒருவரைப் புருடராகத்தேடிவைத்துவிட்டன்றே சிவபெருமானை இழிந்த நாயகியாகிய பெண்டாட்டி யாக்கல்வேண்டும். அப்படிச் சிவபெருமானுக்கு உயர்ந்தவர் தாம் யாவரோ? ஒருவரையுங் காணேமே. பக்குவான்மாவாகிய சீவன்றானே? இது என்ன அநியாயம்!! என்ன சிவத்துரோகம்!!

பிள்ளாய்,

சிவபெருமானுக்கு உயர்ந்தவன் சீவன் என்று சமணர்பௌத்தர்களும் சொல்லார்களே. நீங்களும் உங்கள் “ஞானசாரியரும்” அவர்களை நல்லவர்களாக்கி விட்டீர்களே.

எத்துணையுமுயர்ந்த மகானுகிய சிவபெருமானுக்கு எத்துணையுமிழிந்த அற்பனுகிய சீவனை நாயகனுக்கி விட்டீர்களே! உமக்கும் உமது “ஞானசாரியர்” சிவத்துரோக சிகாமணியார்க்கும் தெரிந்த உண்மை அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர்களுக்கும் தெரியாமல் தான் போய்விட்டதோ? நால்வர்களும் தங்கள் தேவாரத்திலும் திருவாசகத்திலும் சிவனை நாயகன் என்றும், சீவனை நாயகி என்றும் பாடியது புத்தியீனந்தானே? நன்றக விழித்துச் சொல்லுக.

10392

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P.O.

நால்வர்பதிகங்களை ஒப்புக்கொண்ட பரமசிவனும் புத்தியீனர்தாமோ? ஆராய்ந்துசொல்லுக.

பிள்ளாய்,

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தேவாரம் முதற்பதிகத்தில் ௩-வது பாட்டில் இரண்டாம் அடியில் "ஏர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்" ௬-வது பாட்டில் இரண்டாமடியில் "இறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்" என்னும் வாக்கியங்களைப் பார்த்திர்களில்லையே?

அதின்படி நாயகன் யார்? நாயகி யார்? வளைகள் கையிலிருந்து சோர நின்ற நாயகியாகிய பெண்டாட்டி சிவபெருமான்ருனே? அவரது உள்ளத்தைக் கவர்ந்தகள்வனுகிய நாயகன் சீவன்ருனே?

திருத்தோணிபுரப்பதிகங்களுள் ஒன்ருகிய பழந்தக்கராகப்பதிகமுழுதையும் பார்த்திர்களில்லையே. அதில்.

சிறையாருமடக்கிளியேயிங்கேவாதேனெடுபொன்
முறையாலேயுணத்தருவன்மொய்பவளத்தொடுதரளந்
துறையாருங்கடற்றேணிபுரத்திறைவன்றுளங்குமிளம்
பிறையாளன்றிருநாமமெனக்கொருகாற்பேசாயே.

என்பதையுள்ளிட்ட பாட்டுக்களில் பிரிவாற்ருது வருந்திய நாயகியாகிய பெண்டாட்டி சிவபெருமான்ருனே? பிரிந்துபோனநாயகனுகிய புருஷன் சீவன்ருனே?

இன்னும் சந்தேகமா?

நாயக நாயகிமுறை சொன்ன திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தேவாரத்தில் எங்கேயாவது சிவபெருமானை நாயகியாகிய பெண்டாட்டி என்றுசொன்னது காட்டுவீர்களா?

சம்பந்தர்க்குத்தான் உண்மை புலப்படவில்லையோ?

பிள்ளாய்,

அப்பர்சுவாமி தேவாரத்தில் திருப்பழனப்பதிகம் முழுதையும் பார்த்திர்களில்லையே. அதில்.

சொன்மாலைபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரோ
பன்மாலைவரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கண்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென்புதுநலமுண்டிகழ்வானே.

என்பதுமுதலிய பாட்டுக்களில் விரகத்தால் வருந்திய நாயகி என்றது சிவபெருமானைத்தானே? அவருக்கருள் புரிகின்ற நாயகன் சீவன்ருனே? நீங்கள் கொண்டபடி நாயகி சிவபெருமானென்பது அப்பர்சுவாமிகளுக்குத் தெரியாமற்போய் விட்டதோ? சீவன் நாயகன் அவனுக்குச் சிவன் பெண்டாட்டிஎன்பது அப்பர்சுவாமிபதிகத்தில் எங்கேயாவது காட்டுவீர்களா?

பிள்ளாய்,

சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரத்தில் திருவாரூர்ப்பதிகம் முழுதையும் பார்த்திர்களில்லையே! அதில்,

வண்டுகொள்கொண்டல்காள்வார்மணற்குருகுகா
ளண்டவாணர்தொழுமடிகளாரூரனைக்
கண்டவாறுங்காமத்தீக்கனன்றெரிந்துமெய்
யுண்டவாறும்மிவையுணர்த்தவல்லீர்களே.

என்பதை உள்ளிட்ட பாட்டுக்களில் விரகத்தால் வருந்திய நாயகியாகிய பெண்டாட்டி என்றுசொன்னது சிவபெருமானைத்தானே! அவருக்கு அருள்புரி கின்ற நாயகனென்றது மும்மலப்பசுவாகிய சீவனைத்தானே!

பிள்ளாய்,

சிவபெருமான் நாயகியாகிய பெண்டாட்டிஎன்பது உங்களுக்குத் தெரிந் தபடி சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குத் தெரியாமற்போய்விட்டதோ!

சீவன்-நாயகன், சிவன்-பெண்டாட்டிஎன்பது சுந்தரமூர்த்திசுவாமிகள் பதி கங்களில் எங்கேயாவது காட்டுவீர்களா?

பிள்ளாய்,

திருவாசகத்தில் திருப்படையாட்சியில் "ஏறுடையானெனையாளுடை நாயகனென்னுள் புகுந்திடிலே" என்றும் "என்னுடைநாயகனாகிய வீசனெதிர்ப் படுமோயிடிலே" என்றும் "என்னையுடைப் பெருமானருளீசனெழுந்தருளப் பெ றிலே" என்றும் "என்னைமுன்னாளுடை யீசனெனத்தனெழுந்தருளப்பெறிலே" என்றும் "இந்து சிகாமணி யெங்களையாள வெழுந்தருளப்பெறிலே" என்றும் "ஈறறியாமறையோனெனையாளவெழுந்தருளப்பெறிலே" என்றும் வரும் வாக்கி யங்களில் நாயகி என்றது சிவபெருமானைத்தானே? நாயகனென்றது பக்குவான் மாவைத்தானே? உங்களுக்குத் தெரிந்த உண்மை மாணிக்கவாசகசுவாமிகளுக் குத் தெரியாமற்போயிற்றே? திருவாசகத்தில் நாயகன் சிவபெருமான் என்று சொல்லிவிட்டுத் திருக்கோவையாரில்வந்து நாயகன் சிவபெருமானல்லன், சீவ னே நாயகன் அவனுக்குப் பெண்டாட்டி சிவபெருமான் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்லிற்று என்பதுதான் உமதுகருத்தோ? அத்தனைதமோற்றம் அம் மாணிக்கவாசகசுவாமிகளுக்கு நேர்ந்தால் அவர்நூலை எப்படி ஒப்புக்கொள் வது? சீவன் நாயகன், சீவனுக்குப் பெண்டாட்டி சிவபெருமான் என்பது திரு வாசகத்தில் எங்கேயாவது காட்டுவீர்களா?

பிள்ளாய்,

பதினோராந்திருமுறையில் நாயகநாயகிமுறை சொன்னபிரபந்தங்களெ ல்லாம் நாயகியாகிய (பெண்டாட்டி) என்றது சிவபெருமானைத்தானே? அவ ருக்கு நாயகனாகிய (புருடன்) என்றது சீவனைத்தானே? சிவபெருமானைப் புரு டனென்று சொன்ன அவைகளை ஒப்புக்கொள்வதா? பெண்டாட்டி என்றுசொ ன்ன "திருக்கோவையுண்மை" என்னும் உங்கள்நூலை ஒப்புக்கொள்வதா?

சைவசமயிகளே, நாயகநாயகிமுறையில் சிவபெருமானைப் புருடனென் றும், சீவனைப் பெண்டாட்டி என்றும், தேவாரம் திருவாசகம் பதினோராந்திரு முறைமுதலிய சைவநூல்களெல்லாம் ஒரேமுகமாகநின்று சொல்கின்றன. ஒரு நூலாவது சிவபெருமான் பெண்டாட்டி சீவன் புருடனென்று சொல்லவேயில்லை. நூலென்ற நூலெல்லாம் சிவபெருமானைப் புருடனென்றுசொல்லியன. வேதங் களெல்லாம் அச்சிவபெருமானையே புருடோத்தமன், பரமபுருடன், நாயகன், ஈசு வரன், பிரபு, பதி, ஈசிதா, அதிபன். என்று முறையிட்டன. அவற்றிற்கு முழுவி ரோதமாகச் சிவபெருமான் பெண்டாட்டி, சீவன் புருடனென்று திருக்கோவை யாருண்மை என்னும் இம்மாபாதகநூல் ஒன்றே சொல்லுகின்றது. இவற்றுள் எது சரி? எது பிழை? எதைக்கொள்ளுகிறீர்கள்? எதை விடுகிறீர்கள்?

பிள்ளாய்,

சிவபெருமான் ஒருவரா? பலரா? சீவன் ஒருவனா? பலரா? பலராகிய சீவர்களுக்குச் சிவபெருமானாகிய ஒருபெண்டாட்டியைக் கட்டிக்கொடுத்தீர்களே நீரும் உமது "ஞானசாரியரும்" ஓரோநாயகிக்குப் பலபுருடர்களானால் இதற்குப் பேரென்ன? சைவசமயிகளே, பாருங்கள். பாருங்கள். சிச்சீ!! வெட்கம்! வெட்கம்!! மிலேச்சர்களும் கேட்டால் விலாக்குலுங்கச் சிரிப்பார்களே!!

பிள்ளாய்,

என்னினைந்து என்செய்தீர்கள்!!

நீரும் உமது "ஞானசாரிய" ரும் சொன்னபடிபார்த்தால் கல்லாலின் கீழ் வந்தபக்குவான்மாக்களாகிய நாலுபுருடர்களுக்கும் தக்ஷிணாமூர்த்தி என்னும் ஒரு பெண்டாட்டியன்றோ வாழ்க்கைப்பட்டாள்!! அப்படித்தானே?

இதெல்லாம் வர்ணனந்தானே, எப்படிச்சொன்னாற்றானென்னை? என்பீரோ? வர்ணனமென்றாலென்னை? சைவநூல்களையெல்லாம். தமிழ்வேதத்தையெல்லாம் புரட்டித் தலைதடுமாற்றமாகச் சிவாபராதம் பேசுவது வர்ணனமாகவா முடியும்? எத்தனையோ பரமார்த்தத்தை அடக்கி நாயகன் நாயகி இலக்கணஞ் சொன்ன தொல்காப்பியம் முதலிய நூல்களையும் தமிழ்வேதம் முதலியவைகளையும் தாண்டி முழுமாறுகப் பொருள்கற்பித்து வர்ணனமென்று தப்பிக்கொள்ள முடியாது.

ஒருசிவனைப் பலசீவர்களுக்குப் புருடனென்று அருணூல்களெல்லாம் சொல்ல, நீரும் உமது "அறிஞர்பெருமானும்" ஒருசிவனைப் பலசீவர்களுக்குப் பெண்டாட்டியாக்கி விட்டீர்களே!! "காரிகையார்கடம்வாழ்விலென்வாழ்வு கடைப்படுமோகாதே" என்னும் திருவாசகத்தையும், குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த பண்டாரமும்மணிக்கோவையில் வரும் ஏழாவது செய்யுளாகிய ஆசிரியப்பாவையும் பார்த்தீர்களில்லையே! இன்னும் எத்தனை! எத்தனை! உள்ளன! இவற்றையெல்லாம் உற்றுணர்ந்தீர்களானால் வியபிசாரதோஷம்பொருந்தப் பலசீவர்களுக்கு ஒருசிவனைப்பெண்டாட்டியாக்குவீர்களா?

இது தனியே ஒவ்வொருதுறைகளைச்சொல்லாது முழுதுங்கோவையாகச் சொல்லுதலால், நாயகிபரம்பொருள் நாயகன் பக்குவான்மா என்றீர்களே!! நன்று! நன்று! ஏதுவிலக்கணம்!!

இதன்பொருள் என்னை? ஒவ்வொருதுறைகளில் சொன்னால்தான் சிவனை நாயகனென்று சொல்லலாமோ? அவ்வளவுக்குத்தான் அவருக்கு நாயகத்துவம் சொல்லமுடியுமோ? முழுதுங்கோவையாகச்சொல்லின் அதுவளா அவருக்கு நாயகத்தன்மை செல்லாதோ? செல்லத் தகுதியில்லையோ? கொஞ்சத்துக்குக் கொஞ்சந்தான் அவர்க்குநாயகத்தன்மை கிடைக்குமோ? ஒவ்வொருதுறைகளில் மாத்திரம் சொல்லுதற்குரிய ஏகதேசநாயகத்துவந்தான் அவர்நாயகத்துவமோ? முழுதும்நாயகத்துவம் சொல்லுகில் ஆன்மாவுக்குத்தான் சொல்லலாமோ? ஆதலால் முழுதுங்கோவையாகச்சொன்னநூலில் முழுநாயகன் என்றுசொல்லுகில், ஆன்மாவைத்தான் சொல்லவேண்டுமோ? உங்களைச்சொல்ல என்ன இருக்கின்றது! இவையெல்லாம் கலிமன்னன் செய்யுங் கூத்துக்களே. நாயகநாயகிமுறையில் முழுநாயகனாகிய சிவபெருமானுக்கு முழுநாயகியாவாள் சீவனென்று அருணூல்களெல்லாம் முடிக்க, அப்படியே முழுதுநாயகன் சிவபெருமான்என்றும், அவர்பால் அத்துவிதக்கலவிபெற்றின்புறும் முழுதுநாயகி சீவனென்றும் மாணிக்கவாசகசுவாமிகளும் கருத்தமைத்துக் கோவைபாடியிருக்க, அதை விபரீதம் பண்ணிச் சமயவரம்பு, சாத்திரவரம்பு, அத்துவிதவரம்பு, சிவாநுபவவரம்பு இவற்றையெல்லாம் புரட்டிவிட்டீர்களே நீரும் உமது ஞானசாரியரும்!!

சிவத்துரோக கண்டனம். 10392. ரு

ஐயையோ !! இது என்னகொடுமை !! நிரீச்சுரவாதிகளை நல்லவர்களாக்கி விட்டீர்களே !! முழுதும்நாயகத்தன்மை சிவபெருமானுக்குச் சொல்லமுடியாது சீவனுக்குச் சொல்லலாம் என்பதைப்பார்க்கிலும், சிவமே இல்லை பொதுப்படக் கடவுளே இல்லை என்றுசொல்லும் நிரீச்சுரவாதிகள் ஏன் நல்லவர்களாகமாட்டார்கள் ?

அத்துவிதக்கலவியாகிய பேரின்பத்தில் முழுதும்நாயகத்தன்மை சிவபெருமானுக்கு இல்லையென்றால் அம்முழுதும் நாயகத்தன்மை அவருக்கு உண்டென்பது மற்றெந்த அவசரத்திலோ ? இந்த வெறுங்குப்பையாய் வெறும்பொய்யாய்க் கழிகின்ற பிராபஞ்சிகமாகிய சிற்றின்பத்திலோ ? இந்தச் சிற்றின்பத்திலோ சிவனை மறந்து தானே நாயகமென்றுநின்றான் இந்தச் சீவன். இவனே பக்குவானானபின் பேரின்பத்திலும்தானே நாயகனென்று முன்னிற்பனெனின், பின் சிவனுக்கு நாயகத்துவம் எங்கே அமையுங்கொல்லோ ? இதனியல்பு விரிப்பிற்பெருகும். அமைக.

ஸ்ரீகச்சியப்பசிவாசாரியசுவாமிகள் கந்தபுராணத்தில் வள்ளிநாயகிதிருமணப்படலத்தில் பல துறைகளை வரிசையாகஎடுத்துச்சொல்லியசமயத்தில் சுப்பிரமணியக்கடவுளை நாயகனென்றும் அவரால் தண்ணளிபெற இருந்த வள்ளிநாயகியாரை நாயகிஎன்றும் வெளிப்படையாகச் சொன்னது பார்த்தீர்களில்லையே !! இதற்கிசையத் திருக்கோவைக்கு உண்மை சொல்லும்பட்சத்தில் நாயகி யார் ? நாயகன் யார் ? நீங்கள் சொன்னபடி பார்த்தால் நாயகி சுப்பிரமணியக் கடவுள், நாயகன் வள்ளிநாயகி என்றன்றோ முடிகின்றது ! அப்படித்தானோ ? அம்மம்ம ! ஆச்சரியம் !

கந்தபுராணத்தும் துறைகள் சொல்லபட்டவே தவிர முழுதுங்கோவையாகச் சொல்லவில்லை. என்பீர்களோ. நல்லது ! ஐயா,

திருவாவடுதுறைக்கச்சியப்பமுனிவர் செய்த திருத்தணிகைப்புராணத்தையாவது பார்த்தீர்களில்லையே !! அதில் வரும் களவுப்படலத்தில் (ருா) துறைக்குமேலே முழுதுங்கோவையாகச் சொல்லிய அவசரத்தில் நாயகிஎன்றது யாரை ? நாயகனென்றதுயாரை ? இதிலும் சந்தேகமா ? ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளை நாயகனாகவும் வள்ளிநாயகியை நாயகியாகவும் தமது (முழுதுங்கோவையில்) பாடிமுடித்தாரோ கச்சியப்பமுனிவர். சுப்பிரமணியக்கடவுளை நாயகனாகப் பாடும்படி இடங்கொடுத்த முழுதுங்கோவை சிவபெருமானை நாயகனாகப் பாடும்படி இடங்கொடாததென்னையோ ? கச்சியப்பமுனிவர்க்குத் தெரிந்தமுறை ஸ்ரீமத் மாணிக்கவாசகசுவாமிகளுக்குத் தெரியவில்லை யென்பதுதான் உங்கள் கருத்தோ ? அட ! பாவமே ! மலையிலிட்ட தீபம்போலக் கச்சியப்பமுனிவர்வாக்கு இருப்பவும், அதுவே திருக்கோவைமுழுதுக்கும் நாயகன் சிவபெருமானே என்று நன்றாக வழிகாட்டவும், அதை உற்றுநோக்காது சிவபெருமான் பெண்டாட்டிஎன்று வம்புரை உரைத்து வழியிருக்கக் குழியில்விழுந்தீர்களே ?

பிள்ளாய்,

உமது "ஞானசாரியர்" செய்ததும் நீர் வெளியிட்டதுமாகிய (திருக்கோவையுண்மை) என்னும் இஃதொன்றே யன்றி நமது சைவநூல்களில் மற்றெந்த நூல் சிவபெருமானை நாயகி என்று கூசாது சொல்லிற்று ? சொல்ல என்னநியாயமிருக்கின்றது ? என்ன அவசியம் வந்துவிட்டது ? எந்தநூல் முட்டுப்பட்டது ? கேவலம் அந்தாதிகள் மும்மணிக்கோவை நான்மணிமாலைகள் முதலியனவாய சிறுநூல்களும் சிவனை நாயகனென்று சொல்லியனவேயன்றி மற்றுண்டோ ? நீரும் "ஞானசாரியரும்" சொன்னபடி சிவபெருமான் பெண்டாட்டி என்று எந்தநூல் தான் துணிந்துசொல்லும் ?

ROJA. MUTHIAH
ARTIST

பட்டதேயெனின், பரத்தைமாட்டுறைதலாகிய செயல்வகையாற் சொல்லப்பட்டதென அதுவும் அவனுக்குப் பெருமையாயேமுடியுமென்க.

தேவாரதிருவாசகங்களை மற்றைச்சைவநூல்களை இறையனாரகப்பொருள் தொல்காப்பியம் முதலியவற்றைத் தாண்டி வம்புரைத்த சைவவிரோதமாபாவி நூலைப், பிள்ளாய், சைவராகிய நீர் சிரமேற்கொண்டது என்னகாரணமோ?

பிள்ளாய்,

பெண்பாலாகிய நாயகி பரம்பொருள் ஆண்பாலாகிய நாயகன் பக்குவான்மா என்ற சிவத்துரோகநூலை இனியாவது விட்டு உண்மையைக் கடைப்பிடிக்க.

இதற்குஏதாவது விடை எழுதும் விஷயத்தில் "சேஷம்கோபேநபூரயேத்" என்றபடி தூஷணத்தில் இறங்காமல் சுருதியுத்தி அனுபவத்துக்கு மாறின்றிக் கிரமமாக எழுதுக. தூஷணம் தோல்வித்தானத்துக்கு அடையாளம். அது கவனிக்கப்படமாட்டாது. அதனால் ஊதியம் ஒருசிறிதுமில்லை. மேல் உங்கள் இஷ்டம்.

நாராயணச்செட்டியாரே,

தாங்கள் கேட்டுக்கொண்டபடி அச்சிடப்பட்டதென்னும் அபிமானத்தால் வீணாக என்மேற்கோபிக்கவேண்டாம். தங்கள் பிள்ளையவர்கள் (தம்பையாபிள்ளை) என்று எழுதுவதைப்பார்த்துத் தம்பேர் பிழையற எழுதத்தெரியாதவரொன்று பிறர்சொல்கின்றார்கள். அது என் பொறுப்பன்று.

இவர்கள் சாத்திரவிஷயத்தில், அதுவும் திருக்கோவைவிஷயத்தில் பிரவேசித்தது சரிதானோ? அது முடிந்த முடிபைப் பாருங்கள். உள்ளதை நான் சொன்னேன். மேல் உங்களிஷ்டம்.

சைவசமயிகளே,

மேலேகாட்டிய நியாயங்களை நன்றாகப் பாருங்கள்.

திருச்சிற்றம்பலக்கோவையின் பேரின்பப்பொருள் சுவாநுபவமாத்திரத்தால் தெரியாமல் தெரிந்துகொள்ளவேண்டியது. அப்படியிருக்க யாரோ முன்னாளில் ஒருவர் எட்டில்வரையத்துணிந்து தேவார திருவாசகங்களையும் மற்றைச் சைவநூல்களையும் இலக்கணவிலக்கியங்களையும் புரட்டி வீணாகப்பாவத்தை ஈட்டிக்கொண்டார். அவரளவினில்லாது நம்மவராகிய சி - தம்பையாப்பிள்ளை அப்புரட்டு நூலை அச்சிட்டுவெளியிட்டார்.

இந்தப் பத்திரிகையை அற்பங்களாய் இல்லாதனவாகிய சொற்பிழை முதலியவற்றை எடுத்து வெறுங்குப்பை அளந்து நான்எழுதவில்லை.

பரமபுருடராகிய சிவனைப் பெண்டாட்டியாக்கிச் சீவனைஅவருக்குப் புருடனாக்கிய சிவத்துரோகம் கண்டிரங்கி மனம்சகிக்காது அன்புமாத்திரத்தாலே லோகோபகாரமாக இதைஎழுதினேன். என்கடமையை நான் செய்தேன். உங்கள்கடமை என்னை? அப்படித்தானோ? அன்றோ? என்பதை நல்லோர்களாகிய நீங்கள் ஆராய்ந்துபார்த்துப் பொருத்தமாயிற்கொள்ளுங்கள். பொருத்தமில்லையாயிற் றள்ளுங்கள். இதுவே உங்கள் கடமை. மேல் உங்களிஷ்டம்.

இது சுருக்கி எழுதியது. விரிவு பின்வரும்;

துன்முகி௵ ஆடி௴ யாழ்ப்பாணம் சங்கானை. } இங்ஙனம், ௸ அ - வெற்றிவேற்பிள்ளை.

சென்னை ஆதிகலாநிதி அச்சுக்கூடம்.

6

Aug
26 1970